## பேரூராட்சிகளின் ஆணையர், சென்னை-28 அவர்களின் செயல்முறைகள்
## முன்னிலை: டாக்டர். இரா.செல்வராஜ்., இ.ஆ.ப.,

ந.க.எண். 5747/2020/அ6 நாள்: 07.02.2022

பொருள்: கருணை அடிப்படையில் பணிநியமனம் – பேரூராட்சிகள் நிர்வாகம் – சிவகங்கை மண்டலம் – சிவகங்கை மாவட்டம் – கானாடுகாத்தான் பேரூராட்சியில் வரித்தண்டலராகப் பணிபுரிந்து –05.05.2017–இல் பணியிடை காலமான கருப்பையா (திரு).மு– என்பவரின் வாரிசுதாரரும் மனைவியுமாகிய ஜெயந்தி (திருமதி)மு. – என்பவரை கருணை அடிப்படையில் கானாடுகாத்தான் பேரூராட்சியில் வரித்தண்டலராக பணிநியமனம் செய்யப்பட்டது –14.11.2019 முற்பகல் முதல் வரித்தண்டலராக பணியில் சேர்ந்தது – வரித்தண்டலர் பணிநிலையில் ஓராண்டு பணி பூர்த்தி செய்தது–பணிவரன்முறை செய்தல் – தொடர்பாக.

பார்வை:
1. சிவகங்கை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண். 1817/2019/டி2, நாள்.12.11.2019
2. சிவகங்கை மாவட்ட ஆட்சித்தலைவரின் கடித ந.க.எண். 1817/2019/டி2 நாள்.08.06.2020.
3. இவ்வியக்கக கடிதம் ந.க.எண்.5747/2020/அ6, நாள்.30.07.2020
4. அரசாணை (நிலை) எண்.48, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு(கியூ) துறை, நாள்.26.02.2021.
5. அரசு கடித எண்.9807/பேரு.1/2020–1, நாள்.22.11.2021

******

**ஆணை:**

சிவகங்கை மண்டலம், சிவகங்கை மாவட்டம் கானாடுகாத்தான் பேரூராட்சியில் வரித்தண்டலராகபணிபுரிந்து 05.05.2017–ல் பணியிடை காலஞ்சென்ற திரு.மு.கருப்பையா என்பவரின் வாரிசுதாரரும் மனைவியுமாகிய திருமதி.மு.ஜெயந்தி என்பவருக்கு பார்வை 1–ன் படி கருணை அடிப்படையில் கானாடுகாத்தான் பேரூராட்சியில் வரித்தண்டலராக பணிநியமனம் வழங்கப்பட்டு 14.11.2019 முற்பகல் முதல் பணியில் சேர்ந்துள்ளார்.

அதன் தொடர்ச்சியாக பார்வை 2–ல் காணும் கடிதத்தில் கருணை அடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட்ட தனியரது பணியினை வரன்முறை செய்ய வரப்பெற்ற கருத்துருவினை பார்வை 3–ல் காணும் இவ்வியக்கக கடிதம் மூலம் அரசுக்கு அனுப்பி

Scanned with OKEN Scanner

வைக்கப்பட்டது. பார்வை 5-ல் காணும் அரசு கடிதத்தில் அரசாணை (நிலை) எ தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு(கியூ) துறை, நாள்.26.02.2021-ல் வெளியி வழிமுறைகளின் படி நியமன அலுவலருக்கு ஒரு நிலை கூடுதல் அதிகாரம் பெற்ற பேரூராட்சிகளின் ஆணையர் நிலையிலேயே இந்நேர்வில் பணிவரன்முறை செய்யலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, சிவகங்கை மண்டலம், சிவகங்கை மாவட்டம் கானாடுகாத்தான் பேரூராட்சியில் வரித்தண்டலராக பணிபுரிந்து வரும் திருமதி.மு.ஜெயந்தி என்பவரது பணியினை அவர் பணியில் சேர்ந்த நாளான கலம் 5-ல் காணும் நாள் முதல் பணிவரன்முறைப்படுத்தி ஆணையிடப்படுகிறது.

| வ. எ | பணியாளர் பெயர்/ பணியின் நிலை | பணிபுரியும் பேரூராட்சி | பணியில் சேர்ந்த நாள் | பணியினை வரன்முறைப்படுத்திய நாள் |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| 1 | திருமதி.மு.ஜெயந்தி வரித்தண்டலர் | கானாடுகாத்தான் பேரூராட்சி | 14.11.2019 மு.ப | 14.11.2019 மு.ப |

மேலும் தனியரின் பணிப்பதிவேட்டில் இப்பொருள் தொடர்பாக உரிய பதிவுகளை மேற்கொள்ளவும், பதிவுகள் மேற்கொள்ளப்பட்டமைக்கான பதிவேட்டின் நகலினை அனுப்பிடவும் சிவகங்கை மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார்.

பேரூராட்சிகளின் ஆணையர்

பெறுநர்:
திருமதி.மு.ஜெயந்தி,
வரித்தண்டலர்,
கானாடுகாத்தான் பேரூராட்சி.
(சிவகங்கை மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் வாயிலாக)

நகல்:
1. மாவட்ட ஆட்சித்தலைவர், சிவகங்கை மாவட்டம்
2. பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், சிவகங்கை மண்டலம்
3. செயல் அலுவலர், கானாடுகாத்தான் பேரூராட்சி
4. அ6 இருப்புப் கோப்பு

Scanned with OKEN Scanner